
## கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ரூ. 5000! ஏழை, எளியோருக்கு

# முதல்வர் அளித்த மிகப்பெரிய “ஜாக்பாட்”!



## இல்லத்தரசிகளின் நெகிழ்ச்சிப் பேட்டி!

**சென்னை, பிப்.15-**

**தமிழகத்தில் உள்ள 1.31 கோடி பெண்களுக்கு, தமிழக அரசு சார்பில் மகளிர் உரிமைத்தொகை ரூ.1,000 மாதம்தோறும் அவர்களது வங்கி கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில், அடுத்த 2 மாதங்களில் தமிழ்நாட்டில் தேர்தல் நடைபெற உள்ளதால், தேர்தல் காலத்தில் மகளிர் உரிமைத்தொகை வழங்குவது சிரமம் என்ற அடிப்படையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்பெயரில், நேற்று முன்தினம் காலை தமிழ்நாட்டில் உள்ள 1.31 கோடி மகளிர்களுக்கு பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய 3 மாதங்களுக்கு மகளிர் உரிமைத்தொகையாக ரூ.3,000மும், கோடைக்கால உதவித்தொகை ரூ.2,000மும் சேர்த்து ரூ.5,000 மகளிர் உரிமைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.**

**உரிமைத் தொகையை பெறும் பெண்கள் அந்த தொகையை சிறு சிறு கடன்களை அடைப்பதற்கும், தமது குழந்தைகளின் கல்வி, முதியோரின் மருத்துவச் செலவுகள் ஆகியவற்றை ஈடுகட்டுவதற்கும் பயன்படுத்துகின்றனர். சிறிய அளவில் அவர்கள் சேமிக்கவும் செய்கின்றனர். இந்த உரிமைத் தொகை பெண்களுக்கு, குறிப்பாகக் கிராமப்புறப் பெண்களுக்குப் பொருளாதாரத் தற்சார்பை அளித்திருக்கிறது.**

**இதை வரவேற்று இல்லத்தரசிகள் கூறியதாவது:**

### காமாட்சி, திருவொற்றியூர்:



தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றது முதல், மகளிருக்கும், மாணவ மாண விகளுக்கும் எண்ணற்ற திட்டங் களை அறிவித்து செயல்படுத்தியுள்ளது. அந்த வகையில் தேர்தல் விதிகளை காரணம் காட்டி 3 மாதங்கள் மகளிர் உரிமை தொகை நிறுத்தப்படும் என்ற தகவல் பொதுவாக நிலவிய நேரத்தில், திடீரென 3 மாதத்திற்கு சேர்த்து ரூ.3 ஆயிரம் மற்றும் கூடுதலாக ரூ.2 ஆயிரம் சேர்த்து ரூ.5 ஆயிரம் தமிழக அரசு வழங் கியது உண்மையிலேயே குடும்பப் பெண்களுக்கு ஒரு வரப்பிரசாதம். ஏற்கனவே விடியல் பயணம் மூலம் மாதம் 1000 ரூபாயை வேலைக்கு செல்லும் பெண்கள் சேமித்து வருகின்றனர். தற்போது மகளிர் உரிமை தொகையும் சேர்ந்து வந்துள்ளதால் நடுத்தர மற்றும் ஏழ்மை நிலையில் உள்ள குடும்ப பெண்களுக்கு நிச்சயம் பயனளிக்கும்.

### K ராதா, பெரம்பூர்:



நடுத்தர மற்றும் ஏழை குடும்பத்தில் உள்ளவர்களுக்கு மாதம் ரூ.1000 என்பது மருந்து மாத்திரைகள் மற்றும் குடும்ப செலவுக்கு மிகவும் பயனுள்ள வகையில் உள்ளது. இந்நிலையில், தமிழக அரசு திடீரென ரூ.5 ஆயிரம் மகளிர் வங்கி கணக்கில் செலுத்தியது இன்ப அதிர்ச்சியாக இருந்தது. தேர்தல் நேரத்தில் இந்த பணம் 3 மாதங்களுக்கு வராது என்று நினைத்தோம். ஆனால், பெண்கள் நல னில் அக்கறையோடு செயல்பட்டு வரும் தமிழக முதல்வர் அதனை முன்கூட்டியே அறிந்து, முன் தேதியிட்டு மகளிர் உரிமைத் தொகையை வழங்கி உள்ளார்.

### செஞ்சி லட்சுமி, பெரம்பூர்:



தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது மாதம் ரூ.1000 மகளிருக்கு தருவது சாத் தியமில்லை என எதிர்க்கட்சியினர் கூறினர். ஆனால் அதனை தமிழக அரசு சாத்தியப்படுத்தியது. இலவச பேருந்தும் சாத் தியமில்லை என்றனர். அதையும் திமுகவின் திராவிட மாடல் அரசு வெற்றிகரமாக செயல்படுத்தியது. தேர்தல் நேரத்தில் மகளிருக்கான உரிமைத் தொகை தடைபட்டு விட கூடாது, என்பதில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலை நோக்கு பார்வையோடு செயல்பட்டு, முன்தேதியிட்டு மகளிர் உரிமைத் தொகை வழங்கியுள் ளார். மேலும், கோடை கலத்தை கருத்தில் கொண்டு ரூ.2 ஆயி ரம் கொடுத்துள்ளார். விடுமுறை நாட்களில் சொந்த ஊர் செல்பவர் களுக்கும் குழந்தைகளை பராம ரிப்பதற்கும் இந்த பணம் நல்ல முறையில் பயன்படும் தமிழக அரசுக்கு இதற்காக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

### லலிதா பாபு, குரோம்பேட்டை:



தேர்தல் வாக்குறுதியில் சொன்னதுது போல திமுக ஆட்சி அமைந்த உடன் முதல் வர் மு.க.ஸ்டாலின் பல்வேறு திட்டங்களை செயல் படுத்தி வருகிறார். அதில் ஒன்றாக மகளிர் உரிமைத் தொகை அனைத்து பெண்களுக்கும் வழங் கப்பட்டு வருகிறது. இந்த தொகை பெண்களுக்கும் பல்வேறு விதத் தில் உதவியாக இருந்து வருகிறது. இந்நிலையில் தேர்தல் வருவதால் வரும் 3 மாதங்கள் பெண்களுக்கு மகளிர் உரிமைத்தொகை நின்று விடக்கூடாது என முன்கூட்டியே அறிந்து 3 மாதங்களுக்கும் சேர்த்து ரூ.3 ஆயிரம் மற்றும் கோடை கால சிறப்பு தொகையாக ரூ.2000 என மொத்தம் ரூ.5000 உதவி தொகையை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சருக்கு மகிழ்ச்சியுடன் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஷபிரா ஆஷிக், மேற்கு தாம்பரம்:



இல்லத்தரசிகளின் நலனை கருதி முதல்வர் மகளிர் உரிமை தொகை வழங்கி வருகிறார் பெண்கள் யாரிடமும், எதற்காகவும் கையேந்தி நிற் காமல் மருத்துவம் உள்ளிட்ட அவசர தேவை களுக்கு மகளிர் உதவித் தொகை பெரும் உதவியாக இருந்து வருகிறது. காலை எழுந்தவுடன் மகளிர் உதவித் தொகையாக ரூ.5000 வங்கி கணக்கிற்கு வந்திருந்தது பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. தொலைநோக்கு பார்வையாக சிந்தித்து பொதுமக்களுக்கு பல் வேறு அருமையான திட்டங்களை செயல்படுத்தி வரும் முதல்வரின் பொன்னான ஆட்சி மீண்டும் தமிழ்நாட்டில் வரவேண்டும் என் பதே ஒட்டுமொத்த மகளிரின் ஒரே விருப்பம்.

### சுஜாதா ரமேஷ், செம்பாக்கம்:



முதல்வர், மாதம் தோறும் குடும்பத் தலைவிகளுக்கு ரூ.1000 மகளிர் உதவி தொகை வழங்கி வருவது ஏழை எளிய மற்றும் நடுத்தர குடும் பங்களின் அத்தியாவசிய தேவைக்கு மிகவும் உதவியாக இருக்கிறது. தேர்தல் வருவதால் மகளிருக்கு கிடைக் கும் உதவி தொகையை தடுத்து நிறுத்த எதிர்க்கட்சியினர் திட்ட மிட்டு வருவதை முன்கூட்டியே அறிந்த முதல்வர் முன்கூட்டியே ரூ.5000 வழங்கியது மிகுந்த மகிழ்ச் சியை ஏற்படுத்தியுள்ளது. கஷ்ட சூழ்நிலையில் இருக்கும் குடும்பத் தினருக்கு இந்த தொகை பெரும் உதவியாக இருக்கும். தொடர்ந்து, இதே போல பல் வேறு வளர்ச்சி திட்ட பணிகள் பொதுமக்களுக்கு வந்து சேர மீண் டும் திமுக ஆட்சிக்கு பொதுமக்கள் வாக்களிப்பார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

### மோகனா, அம்பத்தூர்:



வங்கி கணக்கில் மகளிர் உரிமை தொகை ரூ.5000 வழங் கப்பட்டுள்ளது, என முதல்வர் அறிவித்துள்ள தாக உறவினர் மூலமாக தகவல் கிடைத்தது. உடனடியாக என்னுடைய செல்போனை எடுத்து பார்த்த போது ரூ.5000 என்னுடைய வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள் ளதற்கான குறுஞ்செய்தி பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். ஒவ்வொரு செலவிற்கும் மகன், மகள்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சூழலில் இந்த பணம் எங்களுக்கு மருத்துவ உதவி மற்றும் மருந்து மாத்திரைகள், எங் களுடைய பேரக் குழந்தைகளுக்கு வேண்டிய பொருட்களை வாங்கி கொடுக்க உதவியாக இருக்கும். இதன்மூலம் எங்களுக்கு தேவை யான செலவுகளை யாரையும் கேட் காமல் பார்த்துக் கொள்வோம். தமிழக முதல்வர் மட்டும் நேரில் இருந்திருந்தால் அவருக்கு ஆரத்தி எடுத்து எங்கள் அண்ணனாக ஆற தழுவி முத்தமிட்டு இருப்போம்.

### மாலா, தரமணி:



மகளிர் உதவித் தொகை ரூ.5000 வந்துள்ளது மிகவும் சந்தோஷம். ஏனென்றால் இந்த தொகை குடும்ப பட்ஜெட்டில் ஏற் பட்ட துண்டை சமாளிக்க பெரும் உதவியாக இருக்கும். இதை கொடுத்த தமிழக முதல்வருக்கு எனது மன மார்ந்த நன்றி.

### குலசுமுத்து, துரைப்பாக்கம்:



மறைந்த முன்னாள் முதல்வர் மு. கருணா நிதி குடும்ப சொத்தில் பெண்களுக்கு சம உரிமை கொடுத்து பெண்களை தலைநிமிரச் செய்தார். அவரது மகனான தற்போதைய முதல் வர் மு.க.ஸ்டாலின் பெண்கள் சுயமரியாதையுடன் வாழ கலை ஞர் மகளிர் உரிமை திட்டத்தில் மாதம்தோறும் பெண்களுக்கு ரூ.1000 வழங்கி வருகிறார். இது, பெண்கள் தங்களது தேவையை பூர்த்தி செய்துகொள்ள உதவியாக உள்ளது. இந்நிலையில் நேற்று 3 மாத உரிமைத் தொகை ரூ.3 ஆயி ரம் மற்றும் கோடைகால சிறப்பு உதவித்தொகை ரூ.2 ஆயிரம் என மொத்தமாக ரூ.5 ஆயிரம் வழங்கியது பெண்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. பெண்களுக்கான ஒரே தலைவர் மு.க.ஸ்டாலின் என்பதை நிரூபித்துள்ளார்.

### ஆர். சுமதி, மாதவரம்:



நானும், என் கணவரும் கூலி வேலை செய்து 2 பிள்ளைகளை பராமரித்து வருகிறோம். எங்களுடைய வருமானம் போதுமானதாக இல்லை. கடந்த ஒரு வருடமாக தமிழக அரசின் மகளிர் உரிமை தொகை ரூ.1000 பெற்று வந்தோம். அது மிகவும் பயனுள்ளதாக உள் ளது. தற்போது முன்கூட்டியே 3 மாதத்துக்கான ரூ.3 ஆயிரம் மற்றும் கோடைகால உதவித் தொகையாக ரூ.2 ஆயிரம் என ரூ.5 ஆயிரம் எனது வங்கி கணக்கில் வந்துள்ளது. இந்த பணத்தை என்னுடைய குடும்ப மருத்துவ செலவு, வாடகை கட்டவும், குடும்பத்தை பராமரிக்கவும் பயன்படுத்துவேன். மகளிர் உரிமைத் தொகை வழங் கிய முதல்வருக்கு நன்றி.

### கே.விஜயலட்சுமி, மாதவரம்:



ஏழை குடும்பத்தை சேர்ந்த எனக்கு முதல்வர் கொடுக் கின்ற உரிமை தொகை மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. இதன் மூலம் நான் யாருடைய உதவியம் எதிர் பார்க்காமல் என்னுடைய சொந்த செலவுகளை நானே பார்த்துக் கொள்கிறேன். தற்போது உரிமை தொகை ரூ.5000 எனது வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள் ளதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். என்னைப் போன்ற ஏழை எளிய மக்களுக்கு உரிமை தொகையின் மூலம் உதவி செய் துவரும் தமிழக முதல்வருக்கு நன்றி.

### டி.நந்தினி, திருவொற்றியூர்:

நான் மகளிர் குழுவில் இருக்கிறேன். எனது கணவர் கூலி வேலை செய்து வருகிறார். எனது மகன் 7வது படிக்கி றான். கடந்த

ஒரு வருடமாக மகளிர் உரிமை தொகையை பெற்று வருகிறேன். இது எங்



களுக்கு மிகவும் பயனுள் ளதாக இருக்கிறது. தற்போது முன் கூட்டியே 3 மாதத்திற்கான மாதாந் திர உரிமை தொகை ரூ.3 ஆயிரம் மற்றும் கோடைகால உதவித் தொகையாக ரூ.2 ஆயிரம் என ரூ.5 ஆயிரம் எனது வங்கி கணக்கில் வந்துள்ளது. இவ்வாறு வழங்கப் பட்ட இந்த தொகை என்னுடைய மகனின் படிப்பு செலவிற்கும், எங்களுடைய அன்றாட தேவை களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். என்னைப் போன்ற ஏழை பெண்களுக்கு மகளிர் உரி மைத் தொகை போன்ற பல்வேறு திட்டங்களின் மூலம் உதவி செய்து வரும் தமிழக முதல்வருக்கு எங்க ளது மனமார்ந்த நன்றி.

### டி.செல்வி, திருவொற்றியூர்:



என் கணவர் கட்டிட வேலை செய்து வருகிறார். எனக்கு 2 குழந்தைகள். என்னுடைய கணவருக்கு போதிய வருமா னம் இல்லை. தினமும் வேலை கிடைக்காது. தின மும் கூலி வந்தால் தான் எங்களால் சாப்பிட முடியும் என்ற நிலையில், மாதம்தோறும் மகளிர் உரிமை தொகை மூலம் வரக்கூடிய பணம் எங்களுக்கு மிகவும் பயன்படுகிறது. தற்போது எனக்கு 5000 ரூபாய் வங்கி கணக்கில் வந்துள்ளது, மிக வும் மகிழ்ச்சியாக உள்ளது. இதன் மூலம் என்னுடைய பிள்ளைகளின் கல்வி மற்றும் மருத்துவ செலவுகளை கவனிக்க முடியும்.

### மாயா, ஆலந்தூர்:

நான் பூ வியாபாரம் செய்து வருகிறேன். பூக்களை வாங்க தினசரி கோயம்பேடு



செல்லும்போதெல்லாம் வட்டிக்கு பணம் வாங்கி பூக்களை வியாபாரம் பிறகு கடனை கொடுப்பேன். இப்போது, எனக்கு கவலை இல்லை. ஒரு முதலீடு கிடைத்திருக்கு. மகளிர் உரிமை தொகை ரூ.5000 முதல் வர் கொடுத்தது, எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கு. இனி கடன் வாங்க மாட்டேன். என் மகன் கூட இவ்வளவு பெரிய தொகையை கொடுத்ததில்லை. முதல்வருக்கு நன்றி.

### பவானி, ஆதம்பாக்கம்:



எனது கணவர் காவலாளியாக உள் ளார். அவரது வருமானத்தை வைத்து குடும்பத்தை நடத்துவது சிரமாக உள் ளது. தற்போது மகளிர் உரிமை தொகை ரூ.5000 மகிழ்ச்சியாக உள்ளது. முதல்வருக்கு நன்றி. இவ்வளவு பெரிய தொகை கொடுப்பார் என்று நாங்க நினைத்து பார்க்கவில்லை. அவர் தான் மீண்டும்

ஆட்சிக்கு வருவார். இதுபோன்ற நல்ல காரியங்களை செய்வார், என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

### சாரதா, செம்மஞ்சேரி:



மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெண்களுக்கு மாதம் ரூ.1000 வழங்குவதன் மூலம் தமிழ் நாட்டுப் பெண்கள் முதல்வரை குடும்பத்தில் ஒருவராக பார்க்க ஆரம்பித்து விட்டனர். தற்போது 3 மாத உரிமைத் தொகை மற் றும் கோடை கால சிறப்பு உத வித்தொகை என மொத்தம் ரூ.5 ஆயிரம் வழங்கியதற்கு தமிழ் நாடு முதலமைச்சர் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இவரை யாராலும் வெல்ல முடி யாது என்பதை வரும் சட்டமன்ற தேர்தலில் தமிழ்நாடு மக்கள் நிரூபிப்பார்கள்.

### சாந்தி அபிராமி, தண்டையார் பேட்டை:



முதல்வர் மாதந் தோறும் ரூ.1000 கொடுத்து வருகிறார். அந்தப் பணம் எங்களுக்கு மிகவும் உதவியாக உள்ளது. மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய செலவுகளுக்கு பயன்படுகிறது. தேர்தல் வருவதற்கு முன்பாக இன்ப அதிர்ச்சி யாக முன்கூட்டியே ரூ.5 ஆயிரம் கொடுத்தது எங்களுக்கு பெரும் மகிழ்ச்சியாக உள்ளது. முதல மைச்சருக்கு நன்றி.

### கோடீஸ்வரி, பழைய வண்ணாரப்பேட்டை:



மகளிர் உரிமைத் தொகை எங்களுக்கு மிகவும் உதவியாகவும் அவசர தேவைக்கு

ஏதுவாக உள்ளது இந்தத் திட்டம் கொண்டு வரும்போது சாத்தியமில்லை என்று கூறியவர்கள். இந்த திட்டத்தை நிறுத்த எந்த எல்லைக்கு வேண்டுமானாலும் போகலாம் என்ற அடிப்படையில் தமிழக முதல்வர் தற்போது 3 மாதத்திற்கு ரூ.3 ஆயிரம் அதனுடன் ரூ.2 ஆயிரம் சேர்த்து ரூ.5 ஆயிரம் வங்கி கணக்கில் இருப்பு வைத்ததற்கு நாங்கள் எங்கள் குடும்பத்தின் சார்பாக முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். வரும் தேர்தலில் திமுக அரசு வெற்றி பெறும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

---

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

## “அன்னம் தரும் அமுதகரம்” 360 வது நாள்!

### திரு.வி.க.நகர் தெற்கு பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

*சென்னை,பிப்.15-*

*முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 360 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (14.2.2026), திரு.வி.க.நகர் தெற்கு பகுதி: 1) வட்டம் 75அ, எஸ்.எஸ்.புரம் அ பகுதி, 7வது தெரு, ஓட்டேரி. 2) வட்டம் 75அ, எஸ்.எஸ்.புரம், ஆ பகுதி மெயின் தெரு, புரசைவாக்கம், ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும்*



விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியாராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, எம்.சாமிகண்ணு, இசட்.ஆசாத், பி.ஜெ.துளசிங்கம், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, எஸ்.தமிழ்செல்வி, எஸ்.சசிகுமார், பா.பி.தாஸ், டி.சுரேஷ்குமார் (எ) பொல்லு சுரேஷ், எம்.தமிம், எஸ்.வெங்கடேசன், வி.க.வெங்கடேசன், மீனவரணி பகுதி அமைப்பாளர் தே.ரஞ்சித்குமார், வர்த்தகர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் எஸ்.சதீஷ்குமார். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர். R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.